**<u>நீதித்துறை நடுவர் கூடுதல் மகளிர் நீதிமன்றம், கோயம்புத்தூர்</u>**

**<u>முன்னிலை</u>** :- திரு.அப்துல் ரகுமான், B.Com., L.L.B.,
நீதித்துறை நடுவர், கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
கோயம்புத்தூர்

2023-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 29-ம் நாள் புதன் கிழமை,

திருவள்ளுவராண்டு, 2053, சோபகிருது வருடம், கார்த்திகை திங்கள்
13 ம் நாள் புதன் கிழமை)

**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண்.15/2017**
**CNR NO.:TNCB0A-001548-2017**

**<u>அரசுக்காக:-</u>**

காவல் ஆய்வாளர்,

பேரூர் அனைத்து மகளிர் காவல் நிலையம்,

கோயமுத்தூர்.

(காவல் நிலைய குற்ற எண்.31/2016). ... புகார்தாரர்

/எதிர்/

A1. காளிமுத்து (33/2016) (இறந்துவிட்டார்),
த/பெ.மயில்சாமி,
க.எண்.2/516A,
முதலிபாளையம்,
குமாரசாமி நகர்,
திருப்பூர்.

A2. வேலுமணி (55/2016),
த/பெ.அழகிரிஅம்மாள்,
கிருஷ்ணநகர்,
பாறைகுழி,
வெள்ளியங்காடு,
திருப்பூர்.

A3. சுபா (30/2016),

க/பெ.காளிமுத்து,

2/516 A, முதலிபாளையம்,

குமாரசாமி நகர்,

திருப்பூர்.

... எதிரிகள்

| | | |
|---|---|---|
| குற்றவியல் நடைமுறை விதிகள் 2019, விதி 106-ன் படியான விவரப்பட்டியல் | | |
| 1. | வரிசை எண் | C.C.No.15 of 2017 |
| 2. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | பேரூர் அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண்.31 of 2016. |
| 3. | எதிரியின் பெயர் | A1. காளிமுத்து (இறந்துவிட்டார்), த/பெ.மயில்சாமி, க.எண்.2/516A, முதலிபாளையம், குமாரசாமி நகர், திருப்பூர்.<br>A2. வேலுமணி, த/பெ.அழகிரிஅம்மாள், கிருஷ்ணநகர், பாறைகுழி, வெள்ளியங்காடு, திருப்பூர்.<br>A3. சுபா, க/பெ.காளிமுத்து, 2/516 A, முதலிபாளையம், குமாரசாமி நகர், திருப்பூர்.<br>* எதிரிகளின் வயது : 1. 33/2016 2. 55/2016 3. 30/2016<br>* எதிரி தொழில்: - |
| 4. | தந்தையாரின் பெயர் | |
| 5 | தொழில் | |
| 6 | குடியிருப்பு | |
| 7 | வயது | |
| 8 | சம்பவம் நடந்த தேதி | 03.10.2016 |
| 9 | முறையீடு செய்யப்பட்ட தேதி | 03.10.2016 |
| 10 | கைது செய்யப்பட்ட தேதி | - |
| 11 | பிணையில் விடுவித்தல் | - |
| 12 | ஒப்படைத்தல் /அனுப்பிவைத்தல்-ன் தேதி | இல்லை |
| 13 | விசாரணை துவங்கப்பட்ட தேதி | 13.02.2020 |
| 14 | விசாரணை முடிவடைந்த தேதி | 21.11.2023 |

| | | |
|---|---|---|
| 15 | தண்டனை அல்லது உத்தரவு | இ.த.ச. பிரிவுகள் 498(A), 506(i)ன் படி குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்யப்பட்டு கு.வி.மு.ச பிரிவு 248(1)ன் படி அவரை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகின்றது. |
| 16 | தீர்ப்புரை நகலை வழங்குதல் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் மீதான காண்முடிவு / முடிவு | எதிரிகளுக்கு தீர்ப்புரையின் நகல் வழங்கப்-படவில்லை. |
| 17 | காலதாமதத்தின் விளக்கம் | எதிரிகள் வழக்கின் விசாரணை காலத்தில் தலைமறைாக நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருந்ததால் காலதாமதம். |

**As per Rule 106 CRP 2019**

**<u>Case Summary in CC 15/2017</u>**

| Sl.No. | Description | Remarks |
|---|---|---|
| 1. | The period of Remand of the Accused/Surrender | - |
| 2. | Date of filing of the Complaint/Final Report in the Court | 07.02.2017 |
| 3. | The date of Commital of the case to the court of session | Not applicable |
| 4. | First Questioning U/S.240 Cr.P.C | 13.01.2020 |
| 5. | Filing of Miscellanious petition<br>320(2) Cr.P.C<br>311 Cr.P.C | <br>CMP No.48150/2023<br>CMP No.27491/2023 |
| 6. | Date of Examination in chief and Cross examination of witness.<br>PW1 Chief and Cross<br>PW2 Chief and Cross | Witness / Chief / Cross:<br>PW1 / 13.02.2020 / 09.11.2023<br>PW2 / 21.11.2023 / - |
| 7. | NBW Issued date | 29.07.2019, 06.05.2022 |
| 8. | NBW recalled | 21.10.2019, 30.11.2022 |
| 9. | Questioning U/s.313(i)(b) of Cr.P.C | 28.11.2023 |
| 10. | Datails of Abscondence of an accused and his appearance/producion | Nil |
| 11. | Grant of stay by superior courts and the result there of | Nil |

இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தில் 10.02.2017 ம் தேதி அன்று இந்நீதிமன்றக் வழக்குக்கோப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு இறுதியாக 29.11.2023 ம் தேதி இந்நீதிமன்ற விசாரணைக்கு வந்தபோது அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை-II அவர்களும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.கனகராஜ், பி.ஏ., பி.எல்., திரு.விக்ரம், பி.காம்., பி.எல்., அவர்களும் ஆஜராகி, இரு தரப்பு வாதங்களும் கேட்டு ஆவணங்கள் பரிசீலனை செய்த பின்பு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>**தீர்ப்புரை**</u>

**இவ்வழக்கானது பேரூர் அனைத்து மகளிர் காவல் நிலையம், காவல் ஆய்வாளர் அவர்களால் குவிமுச பிரிவு 173(2)ன் கீழ் 07.02.2017 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் அடிப்படையில் இ.த.ச. பிரிவுகள் 498(A), 506(i)ன் கீழ் குற்றச்சாட்டுகளுக்காக கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வழக்காகும்.**

2. <u>அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>

நிகழ்நிலை புகார்தாரருக்கும் 1 ம் எதிரிக்கும் கடந்த 25.02.2004 ம் தேதி பெரியோர்கள் முன்னிலையல் செம்மேடு சௌண்டேஸ்வரி அம்மன் திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றுள்ளது. இருவருக்கும் தற்போது சரண்யா என்ற பெண் குழந்தை உள்ளது. திருமணத்திற்கு பிறகு நிகழ்நிலை புகார்தாரரும் 1 ம் எதிரியும் எதிரியின் வீடாகிய கதவு எண்.2/516/70 எ முதலிபாளையம், குமாரசாமி நகர், திருப்பூர் என்ற முகவரியில் வாழ்ந்து வந்துள்ளனர். திருமணமான மறுநாளே 1 ம் எதிரியானவர் தினமும் குடித்துவிட்டு வந்து நிகழ்நிலை புகார்தாரரை அடித்து சித்ரவதை செய்து வந்துள்ளார். கடந்த 5 வருடங்களுக்கு முன்பு நிகழ்நிலை புகார்தாரரை 1 ம் எதிரியானவர் வீட்டை விட்டு துரத்தியதால் நிகழ்நிலை புகார்தாரர் தனது பெண் குழந்தையுடன் தனது பெற்றோரின் ஆதரவில் வசித்து வரும் சூழ்நிலையில் மீண்டும் எதிரியானவர் நிகழ்நிலை புகார்தாரரை பார்க்க மாதம் இரு முறை வந்து ஒரு வாரம் வரையில் தங்கிவிட்டு செல்லும் போது நிகழ்நிலை புகார்தாரருக்கும் குழந்தைக்கும் குடும்ப செலவுக்கு கூட எதுவும் கொடுக்கவில்லை. கடந்த 2015 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் ஒரு நாள் இரவு எதிரியானவர் குடித்துவிட்டு வந்து நிகழ்நிலை புகார்தாரரை தகாத வார்த்தைகளால் திட்டியும் நிகழ்நிலை புகார்தாரரின் முடியை பிடித்து இழுத்தும் நீ உன் அப்பாவிடம் 10 பவுனும் 10,000/-

பணமும் கேட்டு வாங்கி உடனே என்னுடன் வருவதாக இருந்தால் வா, இல்லையென்றால் எப்பொழுது வாங்கி வர முடியுமோ அன்று என்னுடன் வாழ வந்தால் போதும். நான் வேறு பெண்ணை திருமணம் செய்து கொள்ள போகிறேன் என்று கூறி சென்றுள்ளார். அதன் பிறகு நிகழ்நிலை புகார்தாரரை பார்க்க எதிரி வராததால் நிகழ்நிலை புகார்தாரரே எதிரி வசிக்கும் திருப்பூர் வீடு சென்றபோது எதிரியுடன் 3ஆம் எதிரியாகிய பெண் இருந்தது பார்த்து நிகழ்நிலை புகார்தாரர் கேட்க 1ம் எதிரி தான் அவரை திருமணம் செய்து கொண்டாக கூறி நிகழ்நிலை புகார்தாரரை வீட்டுக்கு வெளியே வைத்து அடித்தும் 1ம் எதிரியின் தாய் மாமா ஆகிய 2ம் எதிரி மற்றும் 3 எதிரியுடன் சேர்ந்து கொண்டு நிகழ்நிலை புகார்தாரரிடம் இனிமேல் இங்கு வந்தால் நிகழ்நிலை புகார்தாரரையும் குழந்தையையும் கொலை செய்யவும் தயங்கமாட்டோம் என கொலை மிரட்டல் விடுத்து வீட்டைவிட்டு அடித்து துரத்தியுள்ள குற்றத்திற்காக எதிரிகளின் மீது **இ.த.ச பிரிவுகள் 498(A), 506(i)ன் கீழ்** பேரூர் அனைத்து மகளிர் காவல் நிலையம், கோவை காவல் நிலைய குற்ற எண்.31/2016 எண்ணில் 03.10.2016ம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, எதிரிகளின் மீது இ.த.ச. பிரிவுகள் **498(A), 506(i)ன்** கீழ் **பேரூர் அனைத்து மகளிர் காவல் நிலையம்**, காவல் ஆய்வாளர் அவர்களால் கு.வி.மு.ச. பிரிவு 173(2)ன் கீழ் இறுதி அறிக்கை 07.02.2017ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கின் எதிரிகள் மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் முன் பிணை பெற்றுள்ளார்கள்.

3. இந்த வழக்கு இந்த நீதிமன்றத்தில் ஆண்டு பட்டிகை வழக்கு எண்.15/2017 என கு.வி.மு.ச. பிரிவு 190(1)(ஆ)ன் கீழ் 10.02.2017ம் தேதியன்று கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது. எதிரிகள் முன்னிலையானவுடன் இந்த வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச.207 பிரிவின் படி 28.03.2019ம் தேதி எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

4. எதிரிகளுக்கு போதிய அவகாசம் வழங்கப்பட்டது. இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில், எதிரிகளின் மீது குற்றச்சாட்டு வனைய போதிய முகாந்தரம் இருப்பதாக தோன்றியதால், 13.01.2020ம் தேதியன்று எதிரிகளிடம் இ.த.ச. பிரிவுகள் **498(A), 506(i)ன்** கீழ் கேள்வி கேட்கப்பட்டும், இ.த.ச. பிரிவுகள் **498(A), 506(i)ன்** கீழ் குற்றச்சாட்டு வனைந்து தமிழில் விளக்கி

வினவிய போதும், எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்றும், குற்றச்சாட்டை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டினார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையான சாட்சிகள் விசாரிக்கப்-பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 மற்றும் அ.சா.ஆ.2 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. **அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் :**

**(I) அ.சா.1 விஜயலட்சுமி தனது சாட்சியத்தில்** கடந்த 25.02.2004 ம் தேதியன்று தனக்கும் 1 ம் எதிரிக்கும் திருமணம் நடைபெற்றதாகவும், திருமணமாகி ஒரு வாரத்திலேயே 1 ம் எதிரி குடித்துவிட்டு வந்து தன்னை அடித்ததாகவும், 2 ம் எதிரி 1 ம் எதிரியிடம் அவளை அடித்து துரத்திவிடு உனக்கு வேறு திருமணம் செய்து வைக்கிறேன் என்று கூறியதாகவும், மேலும் 2015 ம் ஆண்டில் தன் அப்பாவிடமிருநது 10 பவுன் நகையும் ரூ.10,000/- பணமும் வாங்கி வர சொல்லியும் வாங்கி வரவில்லை என்றால் தான் 2 ம் திருமணம் செய்து கொள்ளப் போவதாக கூறி அடித்து தன்னை தன் தகப்பனார் வீட்டிற்கு அனுப்பி விட்டதாகவும், அதன் பின் 3 மாத காலமாகியும் 1 ம் எதிரி வராததால் மீண்டும் தான் திருப்பூர் வீட்டிற்கு சென்றதாகவும், மேலும் 1 ம் எதிரிக்கும் 3 ம் எதிரிக்கும் திருமணமாகி அந்த வீட்டில் குடியிருந்ததை தான் பார்த்ததாகவும், 1 மற்றும் 3 எதிரிகளிடம் தான் அது பற்றி கேட்டதற்கு தங்கள் இருவருக்கும் திருமணம் ஆகிவிட்டதாக கூறியதால் தான் பேரூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாக சாட்சியமளித்துள்ளார்.

**(ii) அ.சா.2 திருமதி.அமுதா (காவல் ஆய்வாளர்) தனது சாட்சியத்தில்** கடந்த 03.10.2012 ம் தேதி பேரூர் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் திருமதி.இந்திராணி சோபியா நிலைய ஆஜரில் இருந்த போது கோவை மாவட்ட கூடுதல் மகளிர் நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற தபால் கடித எண்.129/2016 நாள் 24.02.2016 ன் படி விஜயலட்சுமி என்பவர் கொடுத்த புகாரின் பேரில் ஆய்வாளர் அவர்கள் காவல் நிலையக்குற்ற எண்.31/2016 சட்டப்பிரிவுகள் 498(A), 506(1) இ.த.சவில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற

தபால் மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அசலுடன் இணைத்து சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார் என்றும், அன்றே சாட்சிகள் விஜயலட்சுமி, சுந்தர்ராஜன், தேவகி, சுமதி, பாண்டியன், நாகமணி, மற்றும் மணி ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் முன் பிணையம் பெற்றுவிட்டதால் அவர்களைக் கைது செய்யவில்லை என்றும், இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து குற்றம் சாட்டப்பட்ட நபர்களின் மீது 28.10.2016ம் தேதி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியமளித்துள்ளார்.

7. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில், எதிரிகளுக்கு பாதகமான அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச.313(1)(ஆ) பிரிவின் படி 28.11.2023ம் தேதி வினவிய போது, எதிரிகள் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை பொய் என்றும், தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினர்.

8. **தீர்வுக்குரிய பிரச்சனை:**

**எதிரிகளின் மீது இ.த.ச. பிரிவுகள் 498(A), 506(i)ன் கீழ் வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து அரசு தரப்பில் சந்தேகமற நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.**

**தீர்வு**

9. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது அரசு தரப்பு ஆவணங்கள் சாட்சிகள் பரிசீலனை செய்யப்பட்டது. எதிரிகளின் மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக நிரூபிக்கப்பட்டதாகவும் எதிரிகளுக்கு அதிக பட்ச தண்டனை வழங்க வேண்டுமாயும் அரசு தரப்பு வாதத்தினை முன் வைத்துள்ளார். மாறாக எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனக்கும் தன் கணவருக்கும் ஏற்பட்ட குடும்பப்பிரச்சனை காரணமாக புகார் கொடுத்துவிட்டேன் என்றும், தற்போது தன் கணவர் இறந்துவிட்டார் என்றும், தன் கணவர் இறந்துவிட்டதால் இந்த வழக்கை தொடர்ந்து நடத்த விரும்பவில்லை என்றும், தான் எதிரிகளுடன் சமாதானமாகச் செல்கிறேன் என்றும், இந்த வழக்கிலிருந்து எதிரிகளை விடுதலை செய்வதில் தனக்கு

ஆட்சேபனை எதுவும் இல்லை என்று குறுக்கு விசாரணை சாட்சியத்தில் சாட்சியம் அளித்துள்ளார் என்றும் எதிரிகள் குற்றமற்றவர் என்றும், எதிரிகளை விடுதலை செய்ய-வேண்டுமென்றும் வாதத்தினை முன் வைத்துள்ளார்.

10. கடந்த 25.02.2004 ம் தேதி நிகழ்நிலை புகார்தாரருக்கும் 1 ம் எதிரிக்கும் திருமணம் நடைபெற்றுள்ளது. கடந்த 2015 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் ஒரு நாள் இரவு எதிரியானவர் குடித்துவிட்டு வந்து நிகழ்நிலை புகார்தாரரை தகாத வார்த்தைகளால் திட்டியும் நிகழ்நிலை புகார்தாரரின் முடியை பிடித்து இழுத்தும் நீ உன் அப்பாவிடம் 10 பவுனும் 10,000/- பணமும் கேட்டு வாங்கி உடனே என்னுடன் வருவதாக இருந்தால் வா, இல்லையென்றால் எப்பொழுது வாங்கி வர முடியுமோ அன்று என்னுடன் வாழ வந்தால் போதும் என்றும், நான் வேறு பெண்ணை திருமணம் செய்து கொள்ள போகிறேன் என்று கூறி சென்றுள்ளார். அதன் பிறகு 1 ம் எதிரி 3 ஆம் எதிரியை திருமணம் செய்து கொண்டாக கூறி நிகழ்நிலை புகார்தாரரை வீட்டுக்கு வெளியே வைத்து அடித்தும் 1 ம் எதிரியின் தாய் மாமா ஆகிய 2 ம் எதிரி மற்றும் 3 எதிரியுடன் சேர்ந்து கொண்டு நிகழ்நிலை புகார்தாரரிடம் இனிமேல் இங்கு வந்தால் நிகழ்நிலை புகார்தாரரையும் குழந்தையையும் கொலை செய்யவும் தயங்கமாட்டோம் என கொலை மிரட்டல் விடுத்து வீட்டைவிட்டு அடித்து துரத்தியுள்ள குற்றம் புரிந்ததாக வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான விஜயலட்சுமி என்பவர் பேரூர் அனைத்து மகளிர் காவல் நிலையம், கோவை ஆஜராகி கொடுத்த புகாரின் பேரில் காவல் ஆய்வாளர் அவர்களால் எதிரிகளின் மீது காவல் நிலைய குற்ற எண்.31/2016 என்ற எண்ணில் இ.த.ச பிரிவுகள் **498(A), 506(1)ன்** கீழான குற்றத்திற்காக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை செய்யப்பட்டு இ.த.ச பிரிவுகள் **498(A), 506(1)ன்** கீழான குற்றத்திற்காக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் இந்த வழக்கு கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

11. அரசுத்தரப்பு வழக்கினை நிரூபிக்கும் பொருட்டு அரசுத் தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அதுபோல அரசுத் தரப்பில் அ.சா.ஆ.1 மற்றும் அ.சா.ஆ.2 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

12. வழக்கின் விசாரணை நிலுவையில் இருந்த சமயம் 1ம் எதிரி காளிமுத்து என்பவர் காலமாகிவிட்டதால் அவருக்கு எதிரான குற்றச்சாட்டு அற்றுபோய் விட்டது. எனவே இந்த வழக்கு 2 மற்றும் 3 எதிரிகளுக்கு எதிராக விசாரணை மேற்கொள்ளப்பட்டு தீர்வுகாணப்பட்டுள்ளது.

13. வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான விஜயலட்சுமி என்பவர் அரசு தரப்பில் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அரசுத்தரப்பு வழக்கின் படி அ.சா.1 தான் பாதிக்கப்-பட்ட நபர் ஆவார். அ.சா.1 தான் காவல் நிலையம் ஆஜராகி எதிரிகள் மீது கொடுத்த புகாரில் கடந்த 2015ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 1ம் எதிரியானவர் குடித்துவிட்டு வந்து நிகழ்நிலை புகார்தாரரை தகாத வார்த்தைகளால் திட்டியும் நிகழ்நிலை புகார்தாரரின் முடியை பிடித்து இழுத்தும் நீ உன் அப்பாவிடம் 10 பவுனும் 10,000/- பணமும் கேட்டு வாங்கி உடனே என்னுடன் வருவதாக இருந்தால் வா, இல்லையென்றால் எப்பொழுது வாங்கி வர முடியுமோ அன்று என்னுடன் வாழ வந்தால் போதும் என்றும், நான் வேறு பெண்ணை திருமணம் செய்து கொள்ள போகிறேன் என்று கூறி சென்றுள்ளார். அதன் பிறகு 1ம் எதிரி 3ஆம் எதிரியை திருமணம் செய்து கொண்டாக கூறி நிகழ்நிலை புகார்தாரரை வீட்டுக்கு வெளியே வைத்து அடித்தும் 1ம் எதிரியின் தாய் மாமா ஆகிய 2ம் எதிரி மற்றும் 3 எதிரியுடன் சேர்ந்து கொண்டு நிகழ்நிலை புகார்தாரரிடம் இனிமேல் இங்கு வந்தால் நிகழ்நிலை புகார்தாரரையும் குழந்தையையும் கொலை செய்யவும் தயங்க-மாட்டோம் என கொலை மிரட்டல் விடுத்து வீட்டைவிட்டு அடித்து துரத்தியுள்ள குற்றம் புரிந்துள்ளதாக புகாரில் குறிப்பிட்டு கூறியுள்ளார்.

14. அ.சா.1 தனது சாட்சியத்தின் போது கடந்த 2015ம் ஆண்டில் 1ம் எதிரி அ.சா.1ன் தகப்பானிடமிருந்து 10 பவுன் நகையும் ரூ.10,000/- பணமும் வாங்கி வர சொல்லியும் வாங்கி வரவில்லை என்றால் தான் 2ம் திருமணம் செய்து கொள்ளப் போவதாக கூறி அடித்து அ.சா.1ஐ அ.சா.1ன் தகப்பனார் வீட்டிற்கு அனுப்பி விட்டதாகவும், அதன் பின் 3 மாத காலமாகியும் 1ம் எதிரி வராததால் மீண்டும் தான் திருப்பூர் வீட்டிற்கு சென்று பார்த்த போது 1ம் எதிரி 3ம் எதிரியை திருமணம் செய்து அந்த வீட்டில் குடியிருந்ததை அ.சா.1 பார்த்ததாகவும், 1 மற்றும் 3 எதிரிகளிடம் அ.சா.1 அது

பற்றி கேட்டதற்கு தங்கள் இருவருக்கும் திருமணம் ஆகிவிட்டதாக கூறியதாக குறிப்பிட்டு கூறியுள்ளார்.

**15.** வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான ஆய்வாளர் திருமதி.இந்திராணி சோபியா என்பவர் பணிமாறுதலில் சென்றுவிட்டதால் அனைத்து மகளிர் காவல் நிலையம் பேரூர் காவல் ஆய்வாளர் திருமதி.அமுதா என்பவர் அரசு தரப்பில் கூடுதல் சாட்சியாக விசாரிக்க வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனுவானது இந்த நீதிமன்றத்தில் சி.எம்.பி.எண்.27491/2023 என்ற எண்ணில் கோப்பிற்கு எடுத்துக்-கொள்ளப்பட்டு அனுமதித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே அனைத்து மகளிர் காவல் நிலையம் பேரூர் காவல் நிலைய ஆய்வாளர் திருமதி.அமுதா என்பவர் அரசு தரப்பில் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் சாட்சியத்தின் போது சம்பவம் தொடர்பாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளது பற்றியும் புலன் விசாரணை செய்து சாட்சிகளை விசாரித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக கூறியுள்ளார்.

**16.** வழக்கின் விசாரணையின் போது எதிரிகளுக்கும் நிகழ்நிலை புகார்தாரருக்கும் இடையே சமாதானம் ஏற்பட்டுவிட்டதாக சொல்லப்பட்டு கு.வி.மு.ச. பிரிவு 320ன் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனுவானது சி.எம்.பி எண்.48150/2023 ஆக கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. எதிரிகளின் மீது கூறப்பட்டுள்ள குற்றச் சாட்டுகளில் இ.த.ச பிரிவுகள் 498(A), 506(1)ல் சமரசம் செய்து கொள்ளக்கூடிய குற்றச்சாட்டுகள் அல்ல என்பதால் எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சமரச மனு 09.11.2023 தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**17.** 1ம் எதிரிக்கும் நிகழ்நிலை புகார்தாரருக்கும் இடையே திருமணம் ஏற்பட்டுள்ளது என்பதும் 1ம் எதிரி நிகழ்நிலை புகார்தாரரின் கணவர் என்பதும் அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது. வழக்கு சம்பந்தமான பிரச்சனை கணவன் மனைவிக்கு இடையே உண்டான குடும்ப பிரச்சனையாகும். அ.சா.1 இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட நபர்கள் ஆவார்கள். அ.சா.1 தான் எதிரிகளின் மீது காவல் நிலையம் ஆஜராகி புகார் கொடுத்துள்ளார். அ.சா.1 டம் 1ம் எதிரி பணம், நகை வேண்டுமென்று கேட்டு அ.சா.1 ஐ

அடித்து வீட்டை விட்டு துரத்திவிட்டு 3ம் எதிரியை திருமணம் செய்து கொண்டதாக எதிரிகள் மீது குற்றச்சாட்டு கூறி புகார் கொடுத்துள்ளார். அ.சா.1 தனது சாட்சியத்தில் 1ம் எதிரி மீது தான் பணம் நகை கேட்டு அடித்து துன்புறுத்தியதாக குற்றச்சாட்டு கூறியுள்ளார். 1ம் எதிரி 3ம் எதிரியை திருமணம் செய்து வாழ்ந்து வந்ததாக குறிப்பிட்டு குற்றச்சாட்டு கூறி சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அவ்வாறு 1ம் எதிரியானவர் 3ம் எதிரியை திருமணம் செய்ததது குறித்து எந்த வித ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை.

18. மேலும் அ.சா.1 தரப்பில் அவ்வாறு எந்த தேதியில் சென்று பார்த்த போது 1ம் எதிரியும் 3ம் எதிரியும் வாழ்ந்து வந்தார்கள் என்பது பற்றியோ எந்த முகவரியில் அவ்வாறு 1, 3 எதிரிகள் வாழ்ந்து வந்தார்கள் என்பது பற்றியோ எந்த வித சங்கதிகளும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. மேலும் புகாரில் சொல்லப்படாத பல்வேறு சங்கதிகளை அ.சா.1 தனது சாட்சியத்தில் மிகைப்படுத்தி கூறி சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 தனது சாட்சியத்தில் 1ம் எதிரி அ.சா.1 டன் வாழ்ந்து வந்த சமயத்தில் இல்லற விசயங்கள் குறித்து வெளியில் சொல்வதாகவும் அதனால் 1ம் எதிரியின் நண்பர்கள் அ.சா.1 டம் தவறாக நடந்து கொள்வதாகவும் 1ம் எதிரி அ.சா.1ன் குழந்தையின் முகத்தில் தலையணையை வைத்து அழுத்தியதாகவும் குறிப்பிட்டு கூறியுள்ளார். ஆனால் மேற்படி சங்கதிகள் எதையும் அ.சா.1 கொடுத்துள்ள புகாரில் சொல்லவில்லை. ஏன் புகாரில் மேற்படி சங்கதிகள் குறித்து சொல்லவில்லை என்ற காரணத்தை நீதிமன்றத்தில் ஏற்கும் படியாக அ.சா.1 தரப்பில் சொல்லப்படவில்லை. மேலும் அ.சா.1 அளித்துள்ள சாட்சியங்களில் நிரூபிக்கும் விதமாக அ.சா.1க்கு ஆதரவாக வேறு எந்த சாட்சிகளும் அரசு தரப்பில் விசாரிக்கப்படவில்லை. மாறாக அ.சா.1 தனது குறுக்கு விசாரணையின் போது மற்ற சாட்சிகள் யாரும் எங்கு உள்ளார்கள் என்று தனக்கு தெரியாது என குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார்கள்.

19. மேலும் வழக்கின் விசாரணையின் போது எதிரிகளுக்கும் வழக்கின் நிகழ்நிலை புகார்தாரருக்கும் இடையே சமரசம் ஏற்பட்டுவிட்டதாக கூறப்பட்டுள்ள நிலையில் எதிரிகளின் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க அ.சா.2ன் சாட்சியம் மட்டுமே போதுமானதாக இல்லை என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. எதிரிகளின் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கும் வகையில் அ.சா.1ன் சாட்சியம் எந்தவிதத்திலும் பலனளிக்க-வில்லை. அ.சா.1ன் குறுக்கு விசாரணை சாட்சியத்தின் போது எதிரி அ.சா.1 டம் பணம்,

நகை கேட்டு அ.சா.1 ஐ அடித்து துரத்தியதாகவோ, 1 ம் எதிரி வேறு திருமணம் செய்து கொண்டதாகவோ எந்தவித சாட்சியமும் அளிக்கவில்லை. அ.சா.1 ன் சாட்சியம் எதிரிகளின் மீதான குற்றச்சாட்டினை பரிசீலனை செய்யவோ, அரசு தரப்பு வழக்கினை தீர்வு காண்பதற்கோ எந்த வகையிலும் பலன் அளிக்கவில்லை என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

20. அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரிகளின் மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்-படவில்லை என இந்த நீதிமன்றம் முடிவு செய்து எதிரிகளை விடுதலை செய்வதே நீதியின் பால் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இறுதியாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே அரசுத்தரப்பு வழக்கில் ஏற்பட்ட சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு சாதகமாக வழங்கி அவர்களை குற்றவாளிகள் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. எனவே எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் இ.த.ச பிரிவுகள் **498(A), 506(1)ன்** படி அரசு தப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்த நீதிமன்றம் இறுதியாக முடிவு செய்கிறது.

21. முடிவில், எதிரிகளின் மீது இ.த.ச பிரிவுகள் **498(A), 506(1)ன்** படி சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் நிரூபணமாகாததால் அவர்களை குற்றவாளிகள் இல்லை என்று கு.வி.மு.ச பிரிவு 248(1)ன் படி தீர்மானித்து, அவர்களை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகின்றது.

22. வழக்கில் வழக்குச் சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை, அதனால் வழக்குச் சொத்து பற்றிய உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை. எதிரிகள் இந்நீதிமன்றத்திற்கு எழுதிக்கொடுத்த பிணை பத்திரம் வழக்கின் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்பு ரத்தாகி விடும் என்று உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சொல்லப்பட்டு, சுருக்கெழுத்து தட்டச்சரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2023-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 29 ம் நாள் புதன் கிழமை அன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

நீதித்துறை நடுவர் (பொறுப்பு),
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
கோயம்புத்தூர்.

**அட்டவணை :**
**அரசு தரப்பு சாட்சிகள்** :

| சாட்சி எண் | அரசு தரப்பு சாட்சிகளின் பெயர் | முதல் விசாரணை செய்த தேதி | குறுக்கு விசாரணை செய்த தேதி |
|---|---|---|---|
| அ.சா.1 | விஜயலட்சுமி | 13.02.2020 | 09.11.2023 |
| அ.சா.2 | திருமதி.அமுதா (காவல் ஆய்வாளர்) | 21.11.2023 | - |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்** :

அ.சா.ஆ.1 - புகார்.
அ.சா.ஆ.2 - முதல் தகவல் அறிக்கை.

**அரசு தரப்பு சான்று பொருள்** : இல்லை

**எதிரிகள் தரப்பு சாட்சிகள்** : இல்லை

**எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை

**பின்குறிப்பு :**

1. வழக்கு விசாரணையின்போது எதிரிகள் பிணையில் இருந்து வருகிறார்.
2. சாட்சிகள் யாரும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. முடிவு அறிக்கை காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
4. எதிரிகள் விடுதலை செய்யப்பட்டார்.
5. வழக்குச்சொத்து பற்றிய உத்தரவு சொத்து பதிவேட்டில் பதியப்பட்டது.

ஒம்/-ஏ.அப்துல்ரஹ்மான்,
நீதித்துறை நடுவர் (பொறுப்பு),
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
கோயம்புத்தூர்.

நகல்:-
மாண்புமிகு தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு
பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

//உண்மை நகல்//

நீதித்துறை நடுவர் (பொறுப்பு),
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
கோயமுத்தூர்.